# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

**முறையீட்டு மனு எண். 165/நகராட்சி/2019**
**நாள் : 25/03/2019**

**திரு M. ஆறுமுகநயினார்,**
**மைலாப்பூர், சென்னை – 600 004.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**குன்னூர் நகராட்சி.** -- **எதிர் மனுதாரர்**

சென்னை, மயிலாப்பூர், வெங்கடேச அக்ரஹாரம் சாலை, எண்.2 என்ற முகவரியில் உள்ள கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி நிறுவனர் சார்பாக முறையீடு செய்யப்பட்ட 20.07.2018 நாளிட்ட முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 165/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, மயிலாப்பூர், வெங்கடேச அக்ரஹாரம் சாலை, எண்.2 என்ற முகவரியில் உள்ள கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி நிறுவனர் சார்பாக தாக்கல் செய்த முறையீட்டு மனுக்களில், குன்னூர் நகராட்சி சம்பந்தப்பட்ட ஒப்பந்த புள்ளி விளம்பரங்களை 01.03.2016 மற்றும் 13.09.2016 நாளிட்ட தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்காக முறையே ரூ. 96,600/– மற்றும் ரூ. 38,593/– ஆக மொத்தம் ரூ. 1,35,493/– வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து அத்தொகையினை வழங்க ஆணையிடக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

2. விளம்பரக் கட்டணம் ரூ.1,32,408/– குன்னூர் நகராட்சியால் 07.09.2018 நாளிட்ட காசோலை எண்.003181 மூலம் வழங்கப்பட்டுவிட்டது என்றும், அக்காசோலை முறையீட்டு நிறுவனத்தால் 18.09.2018 அன்று பெறப்பட்டுள்ளது என்று அந்நிறுவனத்தின் 19.03.2019 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரரின் நிறுவனத்திற்கு வழங்கப்படவேண்டிய விளம்பரக் கட்டணம் ஆறுமாத காலத்திற்கு முன்பே குன்னூர் நகராட்சியால் வழங்கப்பட்டு விட்டது. முறையீட்டு மனு தாக்கல் செய்த 2 மாத காலத்திற்குள் தனது கோரிக்கை நிறைவேற்றப்பட்டும், அவ்விவரத்தினை இம்முறைமன்ற

நடுவத்தில் தெரிவிப்பதற்கு அந்நிறுவனம் 6 மாத கால அவகாசம் எடுத்துக் கொண்டுள்ளது. முறையீட்டு நிறுவனத்தின் கால தாமத நடவடிக்கையால் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை முடித்து வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை பதிவு செய்து இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப் படுகிறது.

**2019–** ஆம் ஆண்டு, **மார்ச்**-திங்கள், **25–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப் பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப் படுகிறது.

-//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

27.3.19

27/3/19

**பெறுநர்**

**1.** **திரு M. ஆறுமுகநயினார்,**
**கிரீன்வேஸ் செய்தி மற்றும் விளம்பர நிறுவனம்,**
**எண்.2, முதல்மாடி, வெங்கடேஸ்வரா அஹ்ரஹாரம் சாலை,**
**மைலாப்பூர், சென்னை –4.**

**2.** **நகராட்சி ஆணையர்,**
**குன்னூர் நகராட்சி,**
**குன்னூர் மாவட்டம்.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**